# 03

## அத்தியாயம் மூன்று

2022 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டுக்கான ஒட்டுமொத்த நிதிச் செயலாற்றுகை

# ஒட்டுமொத்த நிதிச் செயலாற்றுகை

## 3.1 நிதிச் செயலாற்றுகைக் கூற்று

2022 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டுக்கான ஒட்டுமொத்த நிதிச் செயலாற்றுகை

**ஏ.சீ.ஏ-எவ்.**

### 2022 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டுக்கான நிதிச் செயலாற்றுகைக் கூற்று

| பாதீடு 2022 | | குறிப்பு | உண்மையானது 2022 | மீளத்தெரிவிக்கப்பட்டுள்ளது 2021 | ‘ரூபா |
|---|---|---|---|---|---|
| | **வருவாய் பெறுகைகள்** | | | | |
| | வருமான வரி | 1 | - | - | |
| | உள்நாட்டு பொருட்கள்,சேவைகள் மீதான வரி | 2 | - | - | ஏ.சீ.ஏ-1 |
| | சர்வதேச வர்த்தகம் மீதான வரி | 3 | - | - | |
| | வருவாய் அல்லாதவையும் ஏனையவையும் | 4 | - | - | |
| | **மொத்த வருமானப் பெறுகைகள் (அ)** | | - | - | |
| | **வருமானம் அல்லாத பெறுகைகள்** | | | | |
| | திறைசேரி கட்டுநிதிகள் | | 1,434,681,000 | 709,243,000 | ஏ.சீ.ஏ-3 |
| | வைப்புகள் | | 239,079,354 | 185,421,121 | ஏ.சீ.ஏ-4 |
| | முற்பணக் கணக்குகள் | | 45,546,282 | 18,019,240 | ஏ.சீ.ஏ-5 |
| | ஏனைய பிரதான பேரேட்டுப் பெறுகைகள் | | - | - | |
| | **மொத்த வருமானம் அல்லாத பெறுகைகள் (ஆ)** | | **1,719,306,636** | **912,683,361** | |
| | **மொத்த வருமான, வருமானம் அல்லாத பெறுகைகள் இ = (அ)+(ஆ)** | | **1,719,306,636** | **912,683,361** | |
| | **திறைசேரிக்கு அனுப்பிய தொகை (ஈ)** | | - | | |
| | **தேறிய வருவாய் பெறுகைகள் மற்றும் வருவாய் அல்லாத பெறுகைகள் உ= (இ)-(ஈ)** | | **1,719,306,636** | **912,683,361** | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | **கழிக்க: செலவீனம்** | | | | |
| | **மீண்டெழும் செலவீனம்** | | | | |
| 1,193,650,000 | சம்பளங்கள், வேதனங்கள் மற்றும் ஏனைய தொழில் அனுகூலங்கள் | **5** | 1,168,025,258 | 483,931,657 | |
| 242,880,000 | ஏனைய பொருட்களும் சேவைகளும் | **6** | 223,246,945 | 111,842,416 | **ஏ.சீ.ஏ-2(ii)** |
| 86,250,000 | அளிப்புகள், மானியம் மற்றும் மாற்றல்கள | **7** | 106,691,603 | 77,435,090 | |
| - | வட்டி கொடுப்பனவுகள் | **8** | - | - | |
| 220,000 | ஏனைய மீண்டெழும் செலவீனம | **9** | 299,913 | 297,910 | |
| **1,523,000,000** | **மொத்த மீண்டெழும் செலவீனம் (ஈ)** | | **1,498,263,719** | **673,507,073** | |
| | **மூலதனச் செலவீனம்** | | | | |
| 29,300,000 | மூலதனச் சொத்தின் புனரமைப்பும் மேம்பாடும் | **10** | 13,272,944 | 8,551,062 | |
| 11,400,000 | மூலதன சொத்துக்களின் கொள்முதல் | **11** | 2,541,672 | 17,456,540 | |
| 10,200,000 | மூலதன மாற்றீடுகள் | **12** | 4,905,994 | 4,500,000 | **ஏ.சீ.ஏ-2(ii)** |
| - | நிதிச் சொத்துக்களின் கொள்முதல் | **13** | - | - | |
| 17,600,000 | திறனைக் கட்டியெழுப்புதல் | **14** | 15,278,269 | 21,613,741 | |
| 176,500,000 | ஏனைய மூலதனச் செலவினம் | **15** | 137,128,128 | 30,431,303 | |
| **245,000,000** | **மொத்த மூலதனச் செலவினம் (எ)** | | **173,127,007** | **82,552,646** | |
| | வைப்பு கொடுப்பனவு | | 232,470,071 | 191,277,136 | **ஏ.சீ.ஏ-4** |
| | முற்பணக் கொடுப்பனவு | | 46,125,155 | 20,563,393 | **ஏ.சீ.ஏ-5** |
| | ஏனைய பிரதான பேரேட்டுக் கொடுப்பனவுகள் | | | | |
| | **மொத்த பேரேட்டுச் செலவீனம் (ஊ)** | | 278,595,226 | 211,840,529 | |
| | **மொத்த செலவீனம் எ + (ஈ+உ+ ஊ)** | | 1,949,985,952 | 967,900,249 | |
| | **டிசெம்பர் 31 இலுள்ளவாறு மீதி ஏ = (இ - எ)** | | (230,679,316) | (55,216,888) | |
| | **கட்டுநிதி ஒப்பீட்டுக் கூற்றின்படி மீதி** | | (230,679,316) | (55,216,888) | **ஏ.சீ.ஏ-7** |
| | **டிசெம்பர் 31 இலுள்ளவாறான கட்டுநிதி மீதி** | | - | | **ஏ.சீ.ஏ-3** |
| | | | - | - | |

## 3.2 2022 டிசெம்பர் 31 இலுள்ளவாறு நிதி நிலமைக் கூற்று

**ஏ.சீ.ஏ-பி**

### 2021 டிசெம்பர் 31 இல் நிதி நிலவரக் கூற்று

| | குறிப்பு | உண்மையானது | |
|---|---|---|---|
| | | 2022 'ரூபா | 2021 'ரூபா |
| **நிதிச் சொத்துக்கள் அல்லாதவை** | | | |
| ஆதனம்,பொறித்தொகுதியும் உபகரணமும் | **ஏ.சீ.ஏ.-6** | 925,861,071 | 665,072,565 |
| **நிதிச் சொத்துக்கள்** | | | |
| முற்பணக் கணக்குகள் | **ஏ.சீ.ஏ.-5** | 123,662,195 | 58,068,525 |
| பணமும் பணத்திற்குச் சமனானவையும் | **ஏ.சீ.ஏ.-3** | - | - |
| **மொத்தச் சொத்துக்கள்** | | **1,049,523,266** | **723,141,090** |
| **நிகரச் சொத்து / பங்கு** | | | |
| திறைசேரியின் தேறிய பெறுமதி | | 106,405,928 | 47,449,805 |
| ஆதனம்,பொறித்தொகுதியும் உபகரணமும் ஒதுக்கமும் | | 925,861,071 | 665,072,565 |
| **நடைமுறைப் பெறுப்புகள்** | | | |
| வைப்புக் கணக்குகள் | **ஏ.சீ.ஏ.-4** | 17,256,267 | 10,618,721 |
| கட்டுநிதி மீதி | **ஏ.சீ.ஏ.-3** | - | - |
| **மொத்தப் பெறுப்புகள** | | **1,049,523,266** | **723,141,091** |

56 தொடக்கம் 57 ஆம் பக்கங்களில் தரப்பட்ட ஏ.சீ.ஏ வடிவமைப்பின்1 தொடக்கம் 7 வரையிலான விரிவான கணக்கு கூற்றுக்கள் மற்றும் 9 தொடக்கம் 55 வரையில் தரப்பட்டுள்ள கணக்குகளின் குறிப்புக்கள் இந்த நிதிக் கூற்றுக்களின் ஒருங்கிணைந்த பகுதிகளாக அமைகின்றன. நிதிக் கூற்றுக்களானது பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளுக்கு இணங்க தயாரிக்கப்பட்டுள்ளதுடன் நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகளுக்கு மிகவும் பொருத்தப்பாடுடைய கணக்கீட்டுக் கொள்கைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. அத்துடன் நிதிக் கூற்றுக்கள், கணக்குக் குறிப்புக்கள் மற்றும் ஏனைய பொருத்தப்பாடுடைய கணக்குகளில் தரப்பட்ட புள்ளிவிபரங்கள் திறைசேரி கணக்கேடுகளுடன் சரிபார்க்கப்பட்டு அவை ஒத்திசைவாக காணப்படுகின்றது எனவும் இத்தால் சான்றுபடுத்துகின்றோம்.

அறிக்கையிடுகின்ற நிறுவனத்தில் தற்போதுள்ள நிதிக் கட்டுப்பாட்டிற்கான பயனுள்ள அகக் கட்டுப்பாட்டு முறைமை மற்றும் நிதிக் கட்டுப்பாட்டிற்கான அகக் கட்டுப்பாட்டு முறைமையின் செயற்றிறனைக் கண்காணிப்பதற்கு காலத்திற்குகாலம் மதிப்பாய்வுகளை மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன், இதன்படி, வினைத்தினுடன் மேற்கொள்ளப்படுவதற்கு அத்தகைய முறைமைக்குத் தேவையான சீராக்கங்கள் மேற்கொள்ளப்பட்டுமுள்ளன என்று நாம் இத்தால் சான்றுப்படுத்துகின்றோம்.

| | | |
|---|---|---|
| ........................................ | ........................................ | ........................................ |
| Chief Accounting Officer | Accounting Officer | Chief Finance Officer |
| Date : 2023.05.31 | Date : 2023.05.31 | Date :2023.05.31 |
| R P A Wimalaweera<br>Secretary<br>Ministry of Labour and Foreign Employment<br>7th Floor, "Mehewara Piyesa"<br>Narahenpita, Colombo 05. | J. A. D. S. Nishamini<br>Chief Accountant<br>Ministry of Labour<br>6th Floor, "Mehewara Piyesa"<br>Narahenpita,<br>Colombo 05. | R T B A A Rathnayake<br>Chief Financial Officer<br>Ministry of Labour and Foreign Employment<br>6th Floor, "Mehewara Piyesa"<br>Narahenpita, Colombo - 05 |

## 3.3 2022 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டுக்கான பண ஓட்டக் கூற்று

**ஏ.சீ.ஏ-சீ**

### 2022 டிசம்பர் 31 இல் முடிவடைந்த காலப்பகுதிக்கான பண ஓட்டக் கூற்று

| | உண்மையானது | |
|---|---|---|
| | 2022 ‘ரூபா | மீளத்தெரிவிக் கப்பட்டுள்ளது 2021 |
| **இயக்கச் செயற்பாட்டிலிருந்தான பண ஓட்டங்கள்** | | |
| மொத்த வரி பெறுகைகள் | | |
| கட்டணங்கள், அபராதங்கள், தண்டப்பணம் மற்றும் உரிமங்கள | | |
| இலாபம் | | |
| வருமானமல்லாத பெறுகைகள் | | |
| ஏனைய தலைப்புகள் மீது சேகரிக்கப்பட்ட வருவாய் | 67,603,030 | 27,145,688 |
| பெறப்பட்ட கட்டுநிதிகள் | 1,434,681,000 | 709,243,000 |
| முற்பண அறவீடு | 45,546,282 | 17,971,754 |
| வைப்புப் பெறுகைகள் | 238,730,729 | 185,421,121 |
| **செயற்பாடுகளிலிருந்து பெறப்பட்ட மொத்த பணம்(அ)** | **1,786,561,041** | **939,781,563** |
| | | |
| **கழி - பின்வருவனவற்றுக்கு விநியோகிக்கப்பட பணம்:** | | |
| தனிநபர் வேதனாதிகள் மற்றும் செயற்பாட்டுக் கொடுப்பனவுகள | 1,346,754,108 | 627,442,551 |
| மானியங்கள் மற்றும் மாற்றீட்டு கொடுப்பனவுகள் | 106,991,515 | 81,935,090 |
| ஏனைய தலைப்புகள் மீதான செலவு | 26,058,595 | 974,412 |
| திறைசேரிக்கான கட்டுநிதி | - | - |
| முற்பண கொடுப்பனவுகள் | 38,216,664 | 20,695,833 |
| வைப்புப் கொடுப்பனவுகள் | 232,167,333 | 191,277,136 |
| **செயற்பாடுகளுக்கு விநியோகிக்கப்பட்ட மொத்த பணம் (ஆ)** | **1,750,188,215** | **922,325,023** |
| | | |
| **இயக்கச் செயற்பாடுகளிலிருந்தான தேறிய பண ஓட்டம் (இ)=(அ)-(ஆ)** | **36,372,826** | **17,456,540** |
| | | |
| **முதலீட்டு செயற்பாடுகளிலிருந்தான பண ஓட்டம்** | | |
| வட்டி | - | - |
| பங்கிலாபங்கள் | - | - |
| தள்ளுபடி வருமானம் மற்றும் பௌதீக சொத்துக்களின் விற்பனை | - | - |
| கடன் அறவீடு | - | - |
| **முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்தான பண ஓட்டம் (ஈ)** | - | - |

**கழி – பின்வருவனவற்றுக்கு விநியோகிக்கப்பட்ட பணம் :**

| | | |
|---|---|---|
| **பௌதீக சொத்து கொள்முதல் அல்லது நிருமானம் மற்றும் ஏனைய முதலீட்டு கொள்முதல்** | 36,372,826 | 17,456,540 |
| ஏனைய முதலீடு | | |
| **முதலீட்டு செயற்பாடுகளுக்கு விநியோகிக்கப்பட்ட மொத்த பணம் (உ)** | **36,372,826** | **17,456,540** |
| **முதலீட்டு செயற்பாடுகளிலிருந்தான தேறிய பண ஓட்டம் (ஊ)=( ஈ)-( உ)** | **(36,372,826)** | **(17,456,540)** |
| **இயக்கச் செயற்பாடுகளிலிருந்தான, முதலீட்டு செயற்பாடுகளிலிருந்தான தேறிய பண ஓட்டம் (எ)=(இ)-(ஊ)** | - | - |
| **நிதி செயற்பாடுகளுக்கு விநியோகிக்கப்பட்ட பணம் :** | | |
| உள்நாட்டுக் கடன்கள் | - | - |
| வெளிநாட்டு கடன்கள் | - | - |
| பெறப்பட்ட மானியங்கள் | - | - |
| **நிதி செயற்பாடுகளிலிருந்து பெறப்பட்ட மொத்தப் பணம் (ஏ)** | - | - |
| **கழி – பின்வருவனவற்றுக்கு விநியோகிக்கப்பட்ட பணம் :** | | |
| உள்நாட்டு கடன் மீள்கொடுப்பனவு | - | |
| வெளிநாட்டு கடன் மீள்கொடுப்பனவு | - | |
| வைப்பு கணக்குகள் மற்றும் பிற பொறுப்புகளில் மாற்றங்கள் | - | - |
| **நிதி செயற்பாடுகளுக்கு விநியோகிக்கப்பட்ட மொத்தப் பணம் (ஐ)** | - | - |
| **நிதி செயற்பாடுகளிலிருந்தான தேறிய பண ஓட்டம் (ஒ)=(எ)-(ஏ)** | | |
| **காசோட்டத்தின் தேறிய பெயர்ச்சி (ஓ) = (ஏ) - (ஐ)** | - | - |
| **2022 சனவரி 01 அன்று ஆரம்ப பண மீதி** | - | - |
| **2022 டிசெம்பர் 31 அன்று இறுதிப் பண மீதி** | - | - |

## 3.4 நிதி அறிக்கைகளுக்கான குறிப்புகள்

1. **அறிக்கையிடல் காலம்**
   இந்த நிதிநிலை அறிக்கைகளுக்கான அறிக்கையிடல் காலம் 01 ஜனவரி 2022 முதல் 31 டிசம்பர் 2022 வரை ஆகும்.

2. **அளவீட்டின் அடிப்படை**
   குறிப்பிட்ட சொத்துக்களின் மறுமதிப்பீட்டின் மூலம் மாற்றியமைக்கப்பட்ட வரலாற்றுச் செலவில் நிதிநிலை அறிக்கைகள் தயாரிக்கப்பட்டு, வேறுவிதமாக குறிப்பிடப்படாத வரையில், மாற்றியமைக்கப்பட்ட பண அடிப்படையில் கணக்கிடப்படும்.

   நிதி அறிக்கைகளின் புள்ளிவிவரங்கள் இலங்கை ஷரூபாயில் அருகில் உள்ள ஷரூபாய்க்கு வட்டமிடப்பட்டுள்ளன.

3. **வருவாய் அங்கீகாரம்**
   தொடர்புடைய வருவாய் காலத்தைப் பொருட்படுத்தாமல் கணக்கியல் காலத்தில் பண ரசீதுகளில் பரிமாற்றம் மற்றும் பரிமாற்றம் அல்லாத வருவாய்கள் அங்கீகரிக்கப்படுகின்றன.

4. **சொத்து, ஆலை மற்றும் உபகரணங்களின் அங்கீகாரம் மற்றும் அளவீடு (PP&E)**
   சொத்து, ஆலை மற்றும் உபகரணங்களின் ஒரு உருப்படியானது, சொத்துக்களுடன் தொடர்புடைய எதிர்கால பொருளாதார நன்மை நிறுவனத்திற்கு பாயும் மற்றும் சொத்துக்களின் விலை நம்பகத்தன்மையுடன் அளவிடப்படும் போது அது அங்கீகரிக்கப்படுகிறது.

   PP&E ஒரு செலவில் அளவிடப்படுகிறது மற்றும் செலவு மாதிரி பொருந்தாத போது மறுமதிப்பீட்டு மாதிரி பயன்படுத்தப்படுகிறது.

5. **சொத்து, ஆலை மற்றும் உபகரணங்கள் இருப்பு**
   இந்த மறுமதிப்பீட்டு இருப்புக் கணக்கு PP&E இன் தொடர்புடைய கணக்காகும்.

6. **ரொக்கம் மற்றும் பணத்திற்கு சமமானவை**
   31 டிசம்பர் 2022 இல் உள்ள உள்ளூர் நாணயத் தாள்கள் மற்றும் நாணயங்கள் ஆகியவை ரொக்கம் மற்றும் பணத்திற்குச் சமமானவை.

7. **நிதி அறிக்கைகளின் வடிவங்களில் மாற்றங்கள் மற்றும் ஒப்பீட்டு புள்ளிவிவரங்களின் சரிசெய்தல்**
   2022 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையில் செய்யப்பட்ட மாற்றங்களுக்கு ஏற்ப 2021 ஆம் ஆண்டிற்கான ஒப்பீட்டு புள்ளிவிவரங்களில் தொடர்புடைய மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன.

## 3.5 வருவாய் சேகரிப்பில் செயலாற்றுகை

| அட்டவணை 3.1 | வருவாய் சேகரிப்பில் செயலாற்றுகை |
|---|---|

'ரூபா 000

| வருவாய்க் குறியீடு | வருவாய்க் குறியீட்டின் விளக்கம் | வருவாய் மதிப்பீடு | | சேகரிக்கப்பட்ட வருவாய் | |
|---|---|---|---|---|---|
| | | மூல மதிப்பீடு | இறுதி மதிப்பீடு | தொகை ('ரூபா) | இறுதி வருவாய் மதிப்பீடு % ஆக |
| அறிக்கையில்லை | | | | | |

## 3.6 ஒதுக்கப்பட்டுள்ள ஏற்பாடுகளைப் பயன்படுத்துவதிலுள்ள செயலாற்றுகை

| அட்டவணை 3.2 | ஒதுக்கப்பட்டுள்ள நிதிகளைப் பயன்படுத்துவதிலுள்ள செயலாற்றுகை |
|---|---|

'ரூபா 000

| ஏற்பாட்டின் வகை | ஒதுக்கப்பட்ட ஏற்பாடுகள் | | உண்மையான செலவினம் | இறுதி ஒதுக்கீட்டின் % ஆகப் பயன்படுத்தப்பட்ட ஏற்பாடுகள் |
|---|---|---|---|---|
| | மூல மதிப்பீடு | இறுதி மதிப்பீடு | | |
| மீண்டெழுவது | 1,523,000,000/- | 1,529,850,000/- | 1,498,263,718/- | 98 |
| மூலதனம் | 245,000,000/- | 245,000,000/- | 173,127,006/- | 71 |

## 3.7 நி.ஒ.விதி 208 இன் நியதிகளின்படி ஏனைய அமைச்சுக்கள் / திணைக்களங்களின் முகவராக இந்த அமைச்சிற்கு வழங்கப்பட்டுள்ள நிதிசார் ஏற்பாடுகள்

| அட்டணை 3.3 | ஏனைய அமைச்சுக்கள் / திணைக்களங்களின் முகவராக இந்த அமைச்சிற்கு வழங்கப்பட்டுள்ள ஏற்பாடுகள் |
|---|---|

'ரூபா 000

| தொ. இல. | ஏற்பாடுகள் பெறப்பட்ட அமைச்சுக்கள் / திணைக்களங்கள் | ஏற்பாட்டின் குறிக்கோள் | ஏற்பாடு | | உண்மை யான செலவீனம் | இறுதி ஏற்பாட்டு மூ பயன்படுத்தப் பட்ட ஏற்பாடுகள் |
|---|---|---|---|---|---|---|
| | | | மூல ஏற்பாடு | இறுதி ஏற்பாடு | | |
| 01 | உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு | புதிய பட்டதாரி பயிலுனர்களின் கொடுப்பனவுகளை வழங்குவதற்காக | | 18,463, 710.00 | 18,463, 709.69 | 100% |
| 02 | ஓய்வூதியத் திணைக்களம் | ஓய்வு பெற்ற அதிகாரிகளிடமிருந்து அறவிடப்பட வேண்டிய நிலுவைத் தீர்வை | | 345, 954.00 | 345, 954.00 | 100% |

## 3.8 நிதி சாரா ஆதனங்களை அறிக்கையிடுவதில் செயலாற்றுகை

**அட்டவணை 3.4** நிதி சாரா ஆதனங்களை அறிக்கையிடுவதில் செயலாற்றுகை

'ரூபா 000

| ஆதனக் குறியீடு | குறியீட்டு விளக்கம் | பொருட் கணக்கெடுப்புச் சபை அறிக்கையின் படி 2020.12.31 இலுள்ளவாறு மீதி | நிதி நிலமை பற்றிய அறிக்கையின் படி 2022.12.31 இலுள்ளவாறு மீதி | எதிர் காலத்தில் கணக்கிடப்படும் | முன் னேற்றம் மூஇல் அறிக்கையிடப்படுதல் |
|---|---|---|---|---|---|
| 9151 | கட்டடங்களும் கட்டமைப்புகளும் | 31,823, 502/- | 31,823,502/- | - | 100% |
| 9152 | இயந்திரம் | 894,037, 568.52 | 894,037, 568.52 | - | 100% |
| 9153 | காணிகள் | - | - | - | - |
| 9154 | தொட்டுணரமுடியாத ஆதனங்கள் | - | - | - | - |
| 9155 | பௌதீக ஆதனங்கள் | - | - | - | - |
| 9160 | நடந்துகொண்டிருக்கின்ற வேலை | - | - | - | - |
| 9180 | குத்தகை ஆதனங்கள் | - | - | - | - |



**புகைப்படங்களின் 3.1** புலம்பெயர்ந்த தொழிலாளர்களின் குழந்தைகளுக்கு கல்வி உதவி வழங்குதல்

## 3.9 கணக்காய்வாளர் அதிபதியின் அறிக்கை

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE

මගේ අංකය / எனது இல. / My No. LSW/B/MOL/SR/01/2022 ඔබේ අංකය / உமது இல. / Your No. දිනය / திகதி / Date 2022 මැයි 31 දින

பிரதான கணக்கீட்டு அலுவலர்
தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சு.

**2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11 (1) ஆம் பிரிவின் நியதிகளின்படி 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான தொழில் அமைச்சின் நிதிக்கூற்றுக்கள் பற்றிய கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கை**

### 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 தகுதியுள்ள கருத்துக்கள்

2022 திசெம்பர் 31 இலுள்ளவாறான நிதி நிலைமைக் கூற்றுக்கள் உள்ளடங்கலாக 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான தொழில் அமைச்சின் நிதிக்கூற்றுக்கள் மற்றும் அத்திகதியில் முடிவுற்ற ஆண்டுக்கான நிதிச் செயலாற்றுகை கூற்றுக்களும், நிதி ஓட்டக் கூற்றும், 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் மற்றும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (1) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படுவதாகிய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டுள்ளது. 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11 (1) ஆம் பிரிவின்படி, இந்த அமைச்சின் நிதிக் கூற்றுக்கள் மீதான எனது கருத்துக்கள் மற்றும் அவதானிப்புகள் உள்ளடங்கலான சுருக்க அறிக்கை 2020 யூன் 30 ஆம் திகதி பிரதம கணக்கீட்டு அலுவலருக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. கணக்காய்வுச் சட்டத்தின் 11 (2) ஆம் பிரிவின்படி, இந்த அமைச்சுடன் தொடர்புபட்டுள்ள விபரமான வருடாந்த கணக்காய்வு அறிக்கை உரிய காலத்தில் பிரதம கணக்கீட்டு அலுவலருக்கு வழங்கப்படும். இந்த அறிக்கை, இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (6) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படுவதாகிய 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 10 ஆம் பிரிவு நியதிகளில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுகின்றது.

இந்த அறிக்கையில் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கம் தவிர்ந்த, 2022 டிசெம்பர் 31 இலுள்ள தொழில் அமைச்சின் நிதி நிலைமை மற்றும் இந்நிறுவகத்தின் அத்திகதியில் முடிவுற்ற ஆண்டுக்கான நிதிச் செயலாற்றுகை மற்றும் அதன் பண ஓட்டம் இலங்கை அரச துறையின் கணக்கீட்டு நியதிகளின்படி உண்மையான, நியாயமான நிதி நிலைமையைப் பிரதிபலிக்கின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 தகுதியுள்ள கருத்துரைகளுக்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்கள் தகுதியானவை என்பது எனது அபிப்பிராயமாகும். இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கமைவாக எனது

අංක 306/72, පොල්දූව පාර, බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව. இல. 306/72, பொல்துவ வீதி, பத்தரமுல்லை, இலங்கை. No. 306/72, Polduwa Road, Battaramulla, Sri Lanka.
+94 11 2 88 70 28 - 34 +94 11 2 88 72 23 ag@auditorgeneral.gov.lk www.naosl.gov.lk

கணக்காய்வினை நான் நடத்தியுள்ளேன். அந்த நியமங்களின் கீழ் எனது பொறுப்புகள், எனது அறிக்கையின் நிதிக் கூற்றுக் களின் கணக்காய்வுக்கான கணக்காய்வாளரின் பொறுப்புகள் பிரிவில் மேலும் விபரிக்கப்படுகின்றன. நான் பெற்றுக்கொண்ட கணக்காய்வு சான்றுகள் எனது தகுதியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படையை வழங்குவதற்கு போதுமானவையும், பொருத்தமானவையென்றும் நான் நம்புகின்றேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் பிரதம கணக்கீட்டு அலுவலரின் மற்றும் கணக்கீட்டு அலுவலரின் பொறுப்புக்கள்

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38 ஆம் பிரிவில் தெரிவிக்கப்பட்டுள்ள கணக்கீட்டு நியமங்கள் மற்றும் ஏற்பாடுகளுடன் இணங்கும் வகையில் உண்மையான, நியாயமான பார்வையைத் தருகின்ற நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பது மற்றும் மோசடி அல்லது தவறுகளினால் ஏற்படக்கூடிய பொருட்படுத்தக்க தவறுகளற்ற நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு இயலச்செய்வதற்கு தேவையான அத்தகைய அகக்கட்டுப்பாட்டினைத் தீர்மானிப்பது பிரதம கணக்கீட்டு அலுவலரின் பொறுப்பாகும்.

இந்த அமைச்சு 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) ஆம் உட் பிரிவின்படி, அதன் வருடாந்த மற்றும் காலாந்தர நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கு அதன் வருவாய், சொவீனம், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் பற்றிய உரிய புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளைப் பேணுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38 (1) (இ) உட்பிரிவின் படி, அமைச்சின் நிதி முகாமைத் துவத்திற்காக ஆக்கத்திறனுள்ள ஆகக் கட்டுப்பாட்டு முறைமை வகுத்தமைக்கப்பட்டு பேணப்படு கின்றது என்பதை பிரதம கணக்கீட்டு அலுவலர் உறுதிப்படுத்துதல் வேண்டும் என்பதுடன், மேலே சொல்லப்பட்ட முறைமையின் பயனுறுதி தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வுகளை நடத்தி முறைமையை ஆக்கத்திறனுள்ள வகையில் பேணும் நோக்கில் மேலும் தேவையான மாற்றங்கள் ஏற்படுத்தப்படுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களை கணக்காய்வு செய்வது தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையிலமைந்த இந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான அபிப்பிராயத்தைத் தெரிவிப்பது உள்ளடங்கலாக, இந்த நிதிக்கூற்றுக்கள், முழுவதுமாக, பொருட்படுத்தக்கூடிய மோசடி, தவறுகளை கொண்டிருக்கக்கூடிய பொருட்படுத்தத்தக்க பிழைகள் அற்றவை என்ற நியாயமான உத்தரவாதத்தை முன்வைப்பதே எனது நோக்கமாகும். இந்த நியாயமான உத்தரவாதம் உயர்ந்த பட்சமானதாக இருக்கின்ற போதிலும், இலங்கைக் கணக்கீட்டு நியமங்களுக்கமைவான கணக்காய்வொன்றினை மேற்கொள்கின்ற போது பொருட்படுத்தத்தக்க தவறான கூற்றுக்களை அது எப்போதும் வெளிப்படுத்தும் என்ற உத்தரவாதமாகாது. பொருட்படுத்தத்தக்க தவறான கூற்றுக்கள் என்பது, தனித்த அல்லது கூட்டான மோசடி மற்றும் தவறுகளின் பாதிப்புகளால் ஏற்படுத்தப்பட முடியும் என்பதுடன், இதனைப் பயன்படுத்துபவர்கள் இந்த நிதிக் கூற்றுக்களின் அடிப்படையில் நிதிசார் தீர்மானங்களை எடுப்பதை அது பாதிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கமைவாக தொழில்சார் தீர்ப்பு மற்றும் தொழில்சார் ஐயத்துடன் இந்தக் கணக்காய்வினை மேற்கொண்டுள்ளேன். மேலும்,

- தெரிவிக்கப்பட்ட கணக்காய்வு கருத்துக்கான அடிப்படையை வழங்குவதில் மோசடிகள் மற்றும் பிழைகள் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருட்படுத்தத்தக்க தவறான கூற்றுக்களின் ஆபத்தை இனங்காண்பதற்கும் மற்றும் மதிப்பிடுவதற்கும், உரிய கணக்காய்வு நடைமுறைகள் வடிவமைக்கப்பட்டு ஆற்றப்பட்டுள்ளன. மோசடிக்கான காரணிகள், பிழையான கூற்றுக்களைத் தயாரித்தல், வேண்டுமென்று தவிர்த்தல், தவறாக சமர்ப்பித்தல் அல்லது அகக் கட்டுப்பாட்டினைத் தவிர்த்தல் ஆகியவற்றுடன் தொடர்புபட முடியுமாகையால், பொருட்படுத்தத் தக்க கூற்றொன்றினால் ஏற்படுகின்ற ஆபத்திலும் பார்க்க மோசடியின் தாக்கம் அதிகமானதாகும்.

- சந்தர்ப்பங்களுக்கு பொருத்தமான நடைமுறைகளை வடிவமைக்கும் நோக்கில் கணக்காய்வு தொடர்பான அகக் கட்டுப்பாட்டின் புரிந்துணர்வு பெற்றுக்கொள்ளப்பட்டது. ஆனால், அமைச்சின் கட்டுப்பாட்டின் பயனுறுதி தொடர்பான கருத்தை தெரிவிக்கும் நோக்கத்திற்காகவல்ல.

- பொருத்தமான, நியாயமான விதத்தில் வெளிப்படுத்தல்களைக் கொண்டிருக்கின்ற நிதிக் கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களுக்கான அடிப்படையை ஏற்படுத்தியுள்ள கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை மதிப்பிடுதல். வெளிப்படுத்தல் உள்ளடங்கலாக நிதிக் கூற்றுக்களின் கட்டமைப்பினையும் உள்ளடக்கத்தையும் மற்றும் நியாயமான முன்னளிக்கை யினை அடையும் வகையில் குறிப்பிடத்தக்க கொடுக்கல் வாங்கல்களை, நிகழ்வுகளை நிதிக் கூற்றும் பிரதிநிதித்துவப்படுத்துகின்றனவா என்பதையும் மதிப்பிடுதல்.

- வெளிப்படுத்தல் உள்ளடங்கலாக ஓட்டு மொத்த முன்னளிக்கையை, நிதிக் கூற்றுக்களின் கட்டமைப்பினையும் உள்ளடக்கத்தையும் மற்றும் நியாயமான முன்னளிக்கையினை அடையும் வகையில் குறிப்பிடத்தக்க கொடுக்கல் வாங்கல்களை, நிகழ்வுகளை நிதிக் கூற்றும் பிரதிநிதித்துவப் படுத்துகின்றனவா என்பதையும் மதிப்பிடுதல்.

எனது கணக்காய்வின்போது நான் இனங்கண்டுள்ள அகக் கட்டுப்பாட்டில் மற்றும் ஏனைய விடயங் களிலுள்ள ஏதேனும் முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கலாக முக்கியமான கணக்காய்வு காண்பிப்புகள் பற்றி பிரதம கணக்கீட்டு அலுவலருக்கு நான் அறியச் செய்கின்றேன்.

### 1.5. ஏனைய சட்ட தேவைப்பாடுகள் பற்றிய அறிக்கை

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் உட்பிரிவு 6(1) (ஈ) நியதிகளில் பின்வரும் விடயங்களை நான் இத்தால் தெரிவிக்கின்றேன் :

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குகின்றன.

(ஆ) முன்னைய ஆண்டின் நிதிக் கூற்றுக்கள் தொடர்பில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன.

### 1.6 நிதிக்கூற்றுக்கள் பற்றிய கருத்துக்கள்

#### 1.6.1 நிதி மற்றும் செயலாற்றுகைக் கூற்று

2022 டிசம்பர் 13 ஆம் திகதியிடப்பட்ட 05/2022 ஆம் இலக்க அரச கணக்குகள் வழிகாட்டிநெறிகள் சுற்றறிக்கையின் 3.1 ஆம் பிரிவின் நியதிகளின்படி, மாற்றங்கள் எதுவுமின்றி ஊஐபுயுளு வென்ஸ்ரொப் பயன்பாட்டிலிருந்து உருவாக்கப்பட்ட ஐந்தொகை நிலுவையை பயன்படுத்தி நிதிநிலைக் கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளபோதிலும், நிறுவனம் சொல்லப்பட்ட பிரிவுக்கு முரணாக நிதிக் கூற்றுக்களைத் தயாரித்துள்ளது.

#### 1.6.2 வருவாய் அல்லாத பெறுகைகள்

வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஊக்குவிப்பு மற்றும் சந்தைப் பன்முகப்படுத்தல் அமைச்சின் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பிரிவிலிருந்து தீர்க்கப்படாத முன்பண நிலுவைப் பெறுகை 100,000 'ரூபா,இந்த அமைச்சிற்கு 2022 செப்டெம்பர் மாதத்தில் மாற்றுகையில், ஏனைய மூலங்களிலிருந்து பெற்றவைகளாக யுஊயு 3 வடிவத்தில் குறிப்பிடப்பட்டது.

### 1.6.3 பணஓட்டக் கூற்று

2022 டிசெம்பர் 13 ஆம் திகதியிடப்பட்ட 2022ஃ05 ஆம் இலக்க அரச கணக்குகள் வழிகாட்டிநெறிகள் சுற்றறிக்கையின் 6 ஆவது பந்தியின் நியதிகளின்படி பண ஓட்டக் கூற்றுக்களைத் தயாரிப்பதில் பணம் மற்றும் குறுக்கு குறிப்புகள் இரண்டும் கருத்தில்கொள்ளப்படுதல் வேண்டும் என்ற போதிலும், பண ஓட்டக் கூற்று, பணக் குறிப்புகளை மட்டுமே பயன்படுத்தி தயாரிக்கப்பட்டுள்ளது.

### 1.6.4 முன்பணம் செலுத்துதல்

நிதிச் செயலாற்றுகைக் கூற்றின்படி, முன்பணத்தை மீளப் பெறுதல் மற்றும் செலுத்துதல் முறையே 45,546,282 'ரூபா மற்றும் 46,125,155 'ரூபா என்பதுடன், கணினி பிரிண்ட்அவுட் அறிக்கைகளின்படி இவை 46,120, 398 'ரூபா மற்றும் 111,714,067 'ரூபாவாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### 1.6.5 கட்டுநிதி இணக்கக் கூற்று நிலுவை

கட்டுநிதி இணக்கக் கூற்று, 2022 டிசெம்பர் 13 ஆம் திகதியிடப்பட்ட 2022ஃ05 ஆம் இலக்க அரச கணக்குகள் வழிகாட்டிநெறிகள் சுற்றறிக்கையின் 7.10 ஆம் வழிகாட்டிநெறியின்படி தயாரிக்கப்பட வில்லை. திறைசேரி கணக்கு கூற்றுக்கள் கட்டுநிதி இணக்கக் கூற்றுக்களுடன் இணங்கவில்லை.

### 1.6.6 கட்டுநிதி நிலுவை

தொழில் அமைச்சு கணக்காய்வுக்கு சமர்ப்பித்த ஐந்தொகையில், ஆண்டு காலப்பகுதியில் திறைசேரியிலிருந்து பெறப்பட்ட 951,492,000 'ரூபா உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை என்பதுடன், கட்டுநிதி கணக்கு இலக்கம் 249/22 இன் பெறுகைகள் மற்றும் கொடுப்பனவுகளில் 951,592,000 'ரூபா வேறுபாடு காணப்பட்டிருந்தது.

### 1.6.7 நிதி அல்லாத சொத்துக்கள்

2021 டிசெம்பர் 31 இலுள்ள நிதி நிலைமைக் கூற்றில், போக்குவரத்து உபகரணங்களும், இயந்திரங்களும் மற்றும் பொறித்தொகுதி நிலுவை முறையே 416,645,328 'ரூபா மற்றும் 216,603, 735 'ரூபா ஆகும் என்பதுடன், இது, 2022 சனவரி 01 இலுள்ளவாறான ஆரம்ப நிலுவையில் முறையே 624,941,134 'ரூபா மற்றும் 253,022,479 'ரூபா என்பதாக எடுக்கப்பட்டுள்ளது. இந்த வேறுபாட்டிற்கான காரணத்தை கணக்குக் குறிப்பு 1.6.7 இனாலேனும் விளக்கப்பட்டிருக்கவில்லை.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 செலவுகளை முகாமைசெய்தல்

((அ) வரவு செலவுத் திட்ட ஒதுக்கீடுகளில் 26 செலவினக் குறியீடுகள் தொடர்பாக எந்தச் செலவும் செய்யப்படாததால் 'ரூ. 6,240,000, அதாவது 100மூ சேமிப்பு அவதானிக்கப்பட்டது.

(ஆ) 20 செலவினக் குறியீடுகள் தொடர்பாக ஒதுக்கப்பட்ட 62,600,000, 'ரூபா ஏற்பாட்டிலிருந்து ஆய்வாண்டு இறுதியளவில் 22,717,543 'ரூபா மட்டுமே பயன்படுத்தப்பட்டிருந்தது. இந்த செலவினக் குறியீடுகளின் சேமிப்பு சதவீதம் 50 முதல் 94 சதவீதம் வரை இருந்தது.

(இ) ஆய்வாண்டு காலப்பகுதியில், 04 செலவினக் குறியீடுகளின் மதிப்பிட்டுப் பெறுமதி மதிப்பு 1,900,000 'ரூபாவினால் அதிகரித்து 7,409,750 'ரூபாவாக, அதாவது, நிதி ஒழுங்குவிதி 66 இன் நியதிகளின்படி பதில் மதிப்பீடுகள் ஊடாக 152 சதவீதத்திலிருந்து 548 சதவீதமாக அதிகரித்துள்ளது.

### 2.2 பொறுப்புகளையும் கடப்பாடுகளை மேற்கொள்ளுதல்

(அ) மொத்தம் 535,170 'ரூபா பொறுப்புகள் நிதிக் கூற்றுக்களில் 29 சந்தர்ப்பங்களில் சமர்ப்பிக்கப் பட்டிருந்தபோதிலும், அவை திறைசேரி பொறுப்பு அறிக்கைகளில் உள்ளடக்கப்படவில்லை.

(ஆ) கணினியில் பொறுப்புகள் 21 சந்தர்ப்பங்களில் இரட்டிப்பாக காட்டப்பட்ட தவறு 115,331 'ரூபா தொகையாகி திறைசேரி குறிப்புகளில் உள்ளக்கப்பட்டுள்ளது.

### 2.3 அரச அலுவலர்களுக்கான முற்பணக் கணக்குகள் கூற்று இணக்கம்

(அ) 5 வருடங்களுக்கு முன்னர் பதவியை விட்டு வெளியேறிய தொழில் அமைச்சின் அலுவலர் ஒருவரிடமிருந்தும் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பிரிவைச் சேர்ந்த 06 அலுவலர் களிடமிருந்தும் அறவிடப்படவேண்டிய 709,239 'ரூபா, 2022 டிசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் அறவிடப்படவில்லை.

ஆ) 2021 பெப்ரவரி 21 ஆம் திகதி ஓய்வு பெற்றதன்பேரில் அனுப்பப்பட்ட இராஜாங்க அமைச்சில் சேவையாற்றிய அலுவலரிடமிருந்து அறவிடப்படக்கூடிய 198,400 'ரூபா இடர் கடன் நிலுவையை அறவிடுமாறு ஓய்வூதியப் பணிப்பாளர் நாயகத்திற்கு அறிவிக்கப்படவில்லை. ஓய்வூதியத்திலிருந்து தவணை முறையில் மீளப்பெறுமாறு 2022 மே மாதம் ஓய்வூதியப் பணிப்பாளர் நாயகம் திகதியிடப்படாத கடிதம் மூலம் அறிவிக்கப்பட்டிருந்த போதும், அது கிடைக்கவில்லை. இந்தக் கடன் நிலுவையை அறவிடுவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டதாக கணக்காய்வுக்கு உறுதி செய்யப்பட்டிருக்கவில்லை.

(இ) உள்நாட்டு விடுமுறையைப் பெற்றுள்ள தேசிய உற்பத்தித்திறன் செயலகத்தின் அபிவிருத்தி அலுவலரிடமிருந்து இடர் கடன் நிலுவைத் தொகையான 91,000 'ரூபாவினை அறவிடுவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.4 சட்டங்கள், ஒழுங்குகள் மற்றும் ஒழுங்குவிதிகளுடன் இணங்காமை

| சட்டங்கள், ஒழுங்குகள் மற்றும் ஒழுங்குவிதிகளுடன் தொடர்புபட்டவை | இணங்காதவை |
|---|---|
| (அ) தாபனவிதிக் கோவையின் ஒ௭ை ஆம் அத்தியாயத்தின் 1.7 ஆம் பந்தி | 190 பொது படிவத்தின்படி அனுமதிக்கப்பட்ட விடுப்புப் பதிவேடு பராமரிக்கப்படுதல் வேண்டும் என்ற போதிலும், தேசிய உற்பத்தித் திறன் செயலகம் விடுப்புப் பதிவேடுகளை முறையாகப் பேணி யிருக்கவில்லை என்பதுடன், கணக்காய்வின்போது, 2022 ஆம் ஆண்டு தொடர்பில் 634 சந்தர்ப்பங்களில் விடுப்பு விண்ணப்பங்கள் பதிவுசெய்யப்படவில்லை. |
| **(ஆ)** 2009 ஏப்ரல் 16 ஆம் திகதி யிடப்பட்ட 09/2009 ஆம் இலக்க பொது நிருவாக சுற்றறிக்கை | அலுவலர்களின் கைவிரல் பதிவு அறிக்கைகள் சுற்றறிக்கை யிலுள்ள அறிவுறுத்தல்களின்படி மாதந்தோறும் ஆய்வு செய்யப்பட வில்லை என்பதுடன், ஒரு பெண் அலுவலரின் வருகை / புறப்பாடு 2022 சனவரி முதல் மே வரை கைவிரல் பதிவில் பதிவு செய்யப்படவில்லை. |

| | | |
|---|---|---|
| (இ) | 2016 டிசெம்பர் 31 ஆம் திகதியிடப்பட்ட 30/2016 ஆம் இலக்க பொது நிருவாக சுற்றறிக்கை யின் 3.1 ஆம் பந்தி | ஒவ்வொரு எரிபொருள் சோதனையிலிருந்தும் 12 மாதங்களுக்குப் பின்னர் அல்லது 25,000 கிலோமீட்டர் தூரம் ஓடியதன் பின்னர் எரிபொருள் நுகர்வு மீண்டும் பரிசோதிக்கப்படுதல் வேண்டும் என்றபோதிலும், வெளிநாட்டு வேலைவாய்ப்பு பிரிவுக்குச் சொந்தமான 21 வாகனங்கள் தொடர்பாக எரிபொருள் நுகர்வு சோதனைகள் மேற்கொள்ளப்படவில்லை. என்பதுடன் பதிவுப் புத்தகங்கள் இற்றைப்படுத்தப்பட்டு பேணப்படவில்லை. |

## 3. செயற்பாட்டு மீளாய்வுகள்

### 3.1 செயலாற்றுகை

#### 3.1.1 தொலைநோக்கு மற்றும் செயற்பணி

பின்வரும் விடயங்களுக்கு அமைவாக, தொழில் அமைச்சின் கீழ் உள்ள நிறுவனங்களின் விடயங்கள் மற்றும் அமைச்சின் பிரதான செயற்பாடுகளாக குறிப்பிடப்பட்டுள்ள ஊழியர் சேமலாப நிதியத்தின் நிருவாக செயற்பாடுகள் தொடர்பான கொள்கைகள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களை வகுத்தல், அமுல்படுத்தல், பின்தொடர்தல் மற்றும் மதிப்பீடு செய்தல் போன்ற பணிகள் முறையாக முன்னெடுக்கப்படவில்லை என்று அவதானிக்கப்பட்டுள்ளது.

(அ) 2022 டிசெம்பர் 31 வரை ஊசே.நிதியத்தின் தனிப்பட்ட கணக்குகளில் வரவு 282,726,669 'ரூபா வரவு வைக்கப்படவில்லை என்பதுடன், தொழில் ஆணையாளரின் உதவுதொகைக் கணக்கின் 57,174 'ரூபா தொழில் திணைக்களத்தின் உப அலுவலகங்களின் வைப்புக் கணக்குகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ளது.

(ஆ) 2022 ஆம் ஆண்டளவிலும்கூட தனியார் சேமலாப நிதியத்தில் முறையான மேற்பார்வை இடம்பெற்றிருக்கவில்லை

(இ) வேலைவாய்ப்பை ஒழுங்குபடுத்துவது பற்றிய தேசிய கொள்கை மற்றும் மனிதவலு மற்றும் வேலைவாய்ப்பு பற்றிய தேசியக் கொள்கை ஆகியவை 2022 ஆம் ஆண்டின் இறுதியளவிலும்கூட நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### 3.2 சொத்து முகாமைத்துவம்

(அ) அமைச்சுக்குச் சொந்தமான 18,000,000 'ரூபா பெறுமதியான டொயோட்டா லாண்ட் க்'ரூஸ ர் ஜீப் 2018 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதத்திலிருந்து இந்த அறிக்கையின் திகதி வரை பயன்படுத்தப்படவில்லை என்பதுடன், வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பிரிவின் ஒகு-3874 ஆம் பதிவு இலக்கத்தைக்கொண்ட வாகனம் கணக்காய்வு திகதி வரையிலும்கூட பயன்படுத்தப் பட்டிருக்கவில்லை.

(ஆ) 2017 யூன் 28 ஆம் திகதியிடப்பட்ட நிதி மற்றும் ஊடக அமைச்சின் 01ஃ2017 ஆம் இலக்க சொத்து முகாமைத்துவ சுற்றறிக்கை நியதிகளின்படி, 2018 ஆம் ஆண்டு முதல் அனைத்து நிறுவனங்களாலும் கொள்வனவு செய்யப்பட்ட மற்றும் அகற்றப்பட்ட அனைத்து சொத்துக்கள் பற்றிய துல்லியமான விபரங்கள் உரிய காலாண்டின் இறுதியில் கட்டுப்பாட்டாளர் நாயகத்திற்குச் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும் என்ற போதிலும், சுற்றறிக்கைக்கு அமைவாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.3 நட்டங்கள் மற்றும் சேதங்கள்

2021 ஆம் ஆண்டுக்கான பொருட் கணக்கெடுப்புச் சபை அறிக்கையின்படி, வெளிநாட்டு வேலை வாய்ப்பு அமைச்சுக்குச் சொந்தமான இரண்டு கைவிரல் அடையாள ஸ்கானர்கள் இருந்ததாகவும், 2022 ஆம் ஆண்டு கணக்கெடுப்பு பொருட் கணக்கெடுப்புச் சபை அறிக்கையின்படி ஒரு இயந்திரம் பற்றாக்குறையாக இருந்ததாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. தவறிய இயந்திரம் தொடர்பாக நி.ஒ 103 முதல் 109 வரையிலான நியதிகளின்படி நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வேண்டியபோதிலும், அது அவ்வாறு செய்யப்படவில்லை என்பதுடன், நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படவில்லை.

### 3.4 சிக்கனமற்ற கொடுக்கல்வாங்கல்கள்

2020 ஆம் ஆண்டுக்கான தேசிய உற்பத்தித்திறன் விருது வழங்கும் வைபவ வெற்றியாளர்களுக்கு வழங்குவதற்காக 685 வெற்றிச் சின்னங்களுக்கு 4,512,123 'ரூபா கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டு வழங்கப்பட்டு, 2022 யூன் 15 ஆம் திகதி வெற்றிச் சின்னங்கள் களஞ்சியத்தில் கையளிக்கப் பட்டிருந்தன. வெற்றிச் சின்னங்களைப் பெற்ற ஒரு மாதத்திற்குப் பின்னர் அவை பரிந்துரைக் கப்பட்ட தரத்துடன் ஒத்துப்போகின்றதா என்பது பற்றி பரிசோதித்து அறிக்கையிடுமாறு கோரப்பட்டிருந்ததுடன், 2022 செப்டெம்பர் 21 ஆம் திகதியிடப்பட்ட NPS/PR/06/001 ஆம் இலக்க கடிதத்தின்படி, 33 சின்னங்களைத் தவிர, எஞ்சியவை குறைபாடுள்ளவையென்று தெரிவிக்கப்பட்டது. இருந்த போதிலும், வெற்றியாளர்களுக்கு இந்த ன்னங்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

### 3.5 முகாமைத்துவ குறைபாடுகள்

(அ) பயன்படுத்தப்படாத வளங்கள்

(அ) 2022 டிசெம்பர் 31 இல் 4,299,000 'ரூபா மொத்த செலவில் இ-பிரீஸ் திட்டம், 2015 ஆம் ஆண்டில் 1465,200 'ரூபா ஆரம்ப செலவினம் மேற்கொள்ளப்பட்டு, ஒவ்வொரு மாதத்திற்கும் 25,000 'ரூபாவுடன் பராமரிப்பு செலவு 1,700,000 'ரூபா மற்றும் ஏனைய செலவுகள் 133,8000 'ரூபா உற்பத்தித்திறன் விருது வைபவ செயற்பாடுகளுக்கு பயன்படுத்தப்பட்டிருந்த போதிலும், இது நிகழ்வு முகாமைத்துவமும் ஆய்வு முகாமைத்துவமும் மற்றும் ஏனைய எதிர்பார்க்கப்பட்ட செயற்பாடான அலுவலர்களின் நியாயமான நிருவாக செயற்பாடுகளுக்கு பயன்படுத்தப்பட்டிருக்க வில்லை.

(ஆ) 2022 டிசெம்பர் 31 இல் தேசிய உற்பத்தித்திறன் செயலகத்துடன் இணைக்கப்பட்ட 639 உற்பத்தித் திறன் அபிவிருத்தி அலுவலர்களுக்கு, கடமைகள் முறையாக ஒதுக்கப்பட்டிருக்கவில்லை என்பதுடன், அவர்கள் தலைமை அலுவலகத்தால் கண்காணிக்கப்பட்டிருக்கவுமில்லை.

(இ) 2020 ஆம் ஆண்டு முதல் கைத்தொழில் ஏற்றுமதிகள் மற்றும் முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சிற்குச் சொந்தமான WP CAN-1016 என்ற பதிவு இலக்கத்தைக் கொண்ட வாகனத்தை அமைச்சு பயன்படுத்தி வந்திருந்தாலும், அதை அமைச்சின் பெயரில் பதிவு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. வாகனத்தின் வருவாய் உரிமத்தின் செல்லுபடியாகும் காலம் 2021 டிசெம்பர் 19 ஆம் திகதி காலாவதியாகிவிட்டதால், அதைச் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.6 வெளிநாட்டு நிதியிடப்பட்ட கருத்திட்டங்கள்

(அ) வருடாந்த மதிப்பீட்டில் ஒதுக்கீடுகள் ஒதுக்கப்படாத வெளிநாட்டு நிதி தேவைப்படும்போது, பதில் மதிப்பீடு அல்லது வீராமோங் நடைமுறையைப் பயன்படுத்தி ஏற்பாடுகள்

பாதுகாக்கப்படுதல் வேண்டும் என்ற போதிலும், 1994 ஏப்பிரல் 20 ஆம் திகதியிடப்பட்ட 30/94 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையால் பிரகடனப்படுத்தப்பட்டவாறு நி.ஒ 62(2) நியதிகளின்படி நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) வரவு செலவுத் திட்டம் தயாரிக்கும் போது எதிர்பார்க்கப்படாத வெளிநாட்டு உதவிக்கு வரவு செலவுத் திட்டப் பணிப்பாளர் நாயகத்தின் அங்கீகாரம் பெறப்படுதல் வேண்டும் என்றபோதிலும், நி.ஒ 621(6) நியதிகளின்படி அத்தகைய அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை.

(இ) நன்கொடையாளர்களிடமிருந்து நேரடியாக அனுப்பப்படும் பணமானது நி.ஒ 625(3) மற்றும் 30/94 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கை ஆகியவற்றின் அடிப்படையில் திறைசேரியில் வைப்பிலிடப்படுதல் வேண்டும் மற்றும் அத்தகைய மானியங்களைப் பயன்படுத்துவதற்கு மதிப்பிடப்பட்ட ஏற்பாடுகள் உருவாக்கப்படுதல் வேண்டும் என்றபோதிலும், ஆசிய உற்பத்தித் திறன் தாபனத்திடமிருந்து இரண்டு தடவைகள் பெறப்பட்ட 3,975, 914 ‘ரூபா மொத்த நிதி உதவி பொது வைப்புக் கணக்கில் வைப்பிலிடப்பட்டு, அதிலிருந்து செலவினம் செலுத்தப்பட்டது.

**4. மனித வள முகாமைத்துவம்**

2022 ஆம் ஆண்டில் தொழில் அமைச்சில் அங்கீகரிக்கப்பட்டுள்ள மற்றும் உண்மையான பதவியணி பற்றிய விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| | பணியாளர்களின் வகைப்பாடு | அங்கீகரிக்கப்பட்ட பதவியணி | பணியாளர்களின் வகைப்பாடு | அங்கீகரிக்கப்பட்ட பதவியணி |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட மட்டம் | 449 | 298 | 151 |
| (ii) | உயர் மட்டம் | | 665 | 243 |
| (iii) | இரண்டாவது மட்டம் | 5,049 | 4;800 | 249 |
| (iv) | ஆரம்ப மட்டம் | 858 | 704 | 154 |
| **மொத்தம்** | | **7,264** | **6,467** | **797** |

**எம்.ரி.ஐ.கமகே**
சிரேஷ்ட உதவி கணக்காய்வாளர் அதிபதி,
கணக்காய்வாளர் அதிபதிக்காக.

# 04

## அத்தியாயம்

## செயலாற்றுகை குறிகாட்டிகள்

# செயலாற்றுகை குறிகாட்டிகள்

## 4.1 அமைச்சின் செயலாற்றுகைக் குறிகாட்டிகள் செயற்றிட்டத்தன் அடிப்படையில்

**அட்டவணை 4.1** அமைச்சின் செயலாற்றுகைக் குறிகாட்டிகள்

| | குறிகாட்டிகள் | எதிர்பார்க்கப்பட்ட பெறுபேற்றின் விகிதமாக (%) உண்மையான பெறுபேறு | | |
|---|---|---|---|---|
| | | 100% - 90% | 75% - 89% | 50% - 74% |
| 1 | தொழில் உரிமைகளை நிலைநிறுத்துவதற்காக புதிதாக இயற்றப்பட்ட.'.திருத்தப்பட்ட சட்டங்களின் எண்ணிக்கை * | 5 | 3 | 2 |
| 2 | சர்வதேச தொழில் தாபனத்தின் அங்கீகரிக்கப்பட்ட சமவாயங் களுக்கான வருடாந்த அறிக்கையின் எண்ணிக்கை | 100% | | |
| 3 | தொழிற்றுறை அமைதியை மேம்படுத்துவதற்காக எடுக்கப்பட்ட கொள்கை முடிவுகளின் எண்ணிக்கைழு | 4 | | |
| 4 | இலக்கு வைக்கப்பட்ட தொழில் பரிசோதனைகளின் எண்ணிக்கைக்கு அப்பால் நடத்தப்பட்ட தொழில் பரிசோதனை களின் சதவீதம் | | | 61% |
| 5 | சிறுவர் தொழில் குறித்து பெறப்பட்ட முறைப்பாடுகளில், நிறைவுசெய்யப்பட்ட பரிசோதனைககளின் எண்ணிக்கையின் சதவீதம் | | | 54.5% |
| 6 | இலக்கின் சதவீதமாக சமூக கலந்துரையாடலுக்காக நடத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்களின் எண்ணிக்கை | 100% | | |
| 7 | 14 நாட்களுக்குள் ஊழியர் சேமலாப நிதிய அனுகூலக் கொடுப்பனவுகளின் சதவீதம் | | | 67% |
| 8 | வேலையாளர்களின் தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்திற்காக உருவாக்கப்பட்ட தொழில்சார் பாதுகாப்பு அலுவலர்களின் எண்ணிக்கை | 100% | | |
| 9 | தொழில் சட்டங்கள் குறித்து தொழில் அணிக்கு கல்வி அறிவூட்டுவதற்காக நடத்தப்பட்ட கற்கைநெறிகளின் எண்ணிக்கை | 115% | | |
| 10 | தொழில்சார் விபத்துகள் (மரணத்தை ஏற்படுத்தும் மற்றும் மரணத்தை ஏற்படுத்தாத) தொடர்பாக நிறைவு செய்யப்பட வேண்டிய வழக்குகளில் முடிவு செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை | 128% | | |
| 11 | உற்பத்தித்திறன் எண்ணக்கருக்கள் பற்றி பயிற்சி மற்றும் அறிவு வழங்கப்பட்ட நபர்களின் எண்ணிக்கை | 138% | | |
| 12 | பாடசாலை மாணவர்களுக்காக நடத்தப்படும் தொழில் வழிகாட்டல் நிகழ்ச்சித்திட்டங்களின் எண்ணிக்கை | 131% | | |

| | குறிகாட்டிகள் | எதிர்பார்க்கப்பட்ட பெறுபேற்றின் விகிதமாக (%) உண்மையான பெறுபேறு | | | |
|---|---|---|---|---|---|
| | | 100%- 90 % | 75 % - 89% | 50% - 74% | 50% அடு |
| 13 | தொழில் புலம்பெயர்வு தொடர்பான இலங்கையின் தேசிய கொள்கையின் விடயப்பரப்பினை விரிவுபடுத்தல் மற்றும் இற்றைப்படுத்துவதிலுள்ள முன்னேற்றம் | | | | 40% |
| 14 | இலக்கு நாடுகளுடன் கைச்சாத்திடப்பட்டு மீளாயப்பட்ட, இற்றைப்படுத்தபட்ட உடன்படிக்கைகளின் எண்ணிக்கை | | | | 45% |
| 15 | இருதரப்பு உடன்படிக்கைகளில் கைச்சாத்திடுவதற்காக நடத்தப்பட்ட இணைந்த குழுக் கூட்டங்களின் எண்ணிக்கை | 100% | | | |
| 16 | பிராந்திய மற்றும் உலகளாவிய ஒத்துழைப்பை பேணுவதற்காக நடத்தப்பட்ட / பங்குபற்றப்பட்ட கூட்டங்கள் மற்றும் கலந்துரையாடல்களின் எண்ணிக்கை | | 75% | | |
| 17 | புலம்பெயர்வு மற்றும் அபிவிருத்தி தொடர்பான கண்டுபிடிப்புகள் மற்றும் பரிந்துரைகளை கூட்டிணைத்து இறுதி அறிக்கையைத் தயாரித்தல் | 100% | | | |
| 18 | அபிவிருத்தி மற்றும் ஒத்துழைப்புக்கான சுவிஸ் முகவரகத்துடன் நிலையத்துடன் ளை கட்டத்தின் கீழ் அமுல்படுத்தப்படும் கருத்திட்டங்களின் பின்தொடர்தல் | | | 66% | |
| 19 | புலம்பெயர்ந்தோர் கட்டுப்பாட்டு சுட்டி குறித்து நடைபெறும் மதிப்பீடு | | | 50% | |
| 20 | புலம்பெயர் வேலையாளர் குடும்பங்களுக்காக தயாரிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்படும் குடும்ப அபிவிருத்தித் திட்டங்களின் எண்ணிக்கை | 90% | | | |
| 21 | புலம்பெயர் வேலையாளர் குடும்பங்களின் பாதிக்கப்படக்கூடிய சிறுவர்களுக்காக தயாரிக்கப்பட்ட பராமரிப்புத் திட்டங்களின் எண்ணிக்கை | 100% | | | |
| 22 | குடும்ப அபிவிருத்தித் திட்டங்கள் மற்றும் பராமரிப்புத் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதை கண்காணித்தல். | 100% | | | |
| 23 | புலம்பெயர் வேலையாளர்களின் குடும்ப அங்கத்தவர்களை இலக்காகக் கொண்டு நடத்தப்பட்ட சுயதொழில் / வாழ்வாதார கருத்திட்டங்கள் தொடர்பான விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்களின் எண்ணிக்கை. | | | 66% | |
| 24 | நாட்டிற்கு திரும்பிய புலம்பெயர் வேலையாளர்களை மீள ஒன்றிணைப்பதற்கான சுயவேலைவாய்ப்பு / வாழ்வாதார கருத்திட்டங்களின் விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களின் எண்ணிக்கை | 100% | | | |

| | | | | |
|---|---|---|---|---|
| 25 | வெளிநாட்டு வேலைவாய்ப்பு பிரிவின் கீழ் உள்ள நிறுவனங் களின் முன்னேற்றத்தை மீளாய்வு செய்வதற்காக நடத்தப்பட்ட முன்னேற்ற மீளாய்வுக் கூட்டங்களின் எண்ணிக்கை | | | 50% |
| 26 | மாவட்ட அபிவிருத்தி அலுவலர்களின் கடமைகள் தொடர்பாக நடத்தப்பட்ட முன்னேற்ற மீளாய்வுக் கூட்டங்களின் எண்ணிக்கை | | 50% | |
| 27 | பிரதேச மட்ட அபிவிருத்தி அலுவலர்களின் கடமைகள் தொடர்பில் நடத்தப்பட்ட முன்னேற்ற மீளாய்வுக் கூட்டங் களின் எண்ணிக்கை (அமைச்சு அலுவலர்கள் ஊடாக) | | | 28% |
| 28 | பிரதேச மட்ட அபிவிருத்தி அலுவலர்களின் கடமைகள் தொடர்பில் நடத்தப்பட்ட முன்னேற்ற மீளாய்வுக் கூட்டங் களின் எண்ணிக்கை (மாவட்ட அபிவிருத்தி அலுவலர்கள் ஊடாக) | 100% | | |
| 29 | அமைச்சு அலுவலர்களின் இயலுமை அபிவிருத்திக்கான பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களின் எண்ணிக்கை | 100% | | |

* இந்த செயற்பாடுகள் தேவைகளுக்கு ஏற்ப நடத்தப்படுவதால், இறுதி முடிவு நிச்சயமற்றது. எனவே சதவீதத்தை வழங்க முடியாது. இந்த நடவடிக்கைகள் தேவைகளுக்கு ஏற்ப நடத்தப்படுவதால், இறுதி முடிவு திட்டவட்டமாக இல்லை. எனவே சதவீதத்தை வழங்க முடியாது.

# 05

## அத்தியாயம்

நிலைபேறானஅபிவிருத்தி இலக்குகளை அடைவதில் செயலாற்றுகை

## 5.1 இனங்காணப்பட்ட நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள்

**அட்டவணை 5-1** அமைச்சுக்கு ஏற்புடைய நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள்

| பணியிலக்கு / இலக்கு | | | பணியிலக்குகள் | | அடைவுக் குறிகாட்டிகள் | இற்றைவரையான அடைவுகளின் முன்னேற்றம் |
|---|---|---|---|---|---|---|
| 01 | எங்குமுள்ள எல்லா விதத்திலுமான வறுமையை ஒழித்தல் | 1.1 | 2030 ஆம் ஆண்டளவில் எங்குமுள்ள அனைத்து மக்கள் பொருட்டு வறுமையை ஒழித்தல், ஒரு நாளுக்கு கூ1.25 விட குறைவாக வாழும் மக்களாக தற்போது அளக்கப்பட்டமை. | | பாலியல், வயது, தொழில் அந்தஸ்து மற்றும் புவிசார் அமைவிடம் (நகர.'. கிராமிய) ரீதியாக சருவதேச வறுமைக் கோட்டுக்கு கீழ் வாழும் சனத்தொகையின் விகிதாசாரம் | • சுய தொழிலுக்கு ஏற்புடைய 229 விழிப்பூட்டும் நிகழ்ச்சித்திட்டங்கள் புலம்பெயர் வேலையாட்கள் பொருட்டு நடாத்தப்பட்டன.<br>• சுய தொழில் உதவி 181 பயனாளிகளுக்கு விஸ்தரிக்கப்பட்டது.<br>• 312,844 புலம்பெயர்ந்தவர்கள் இ.வெ.வே.ப. இல் பதிவுசெய்துள்ளனர். |
| 04 | உள்ளடக்க சமமான தரமான கல்வியை உறுதிப்படுத்தல் மற்றும் அனைவர் பொருட்டும் வாழ்வுகால கற்றல் வாய்ப்புக்களை மேம்படுத்தல் | 4.4 | 2030 ஆம் ஆண்டளவில், வேலைவாய்ப்பு, ஏற்புடைய தொழில் மற்றும் முயற்சியாண்மை பொருட்டான தொழில்நுட்ப, வாழ்க்கைத்தொழில் திறன்கள் அடங்கலாக உரிய திறன்களை கொண்டுள்ள இளைஞர் மற்றும் முதியோர்களின் கணிசமாக அதிகரித்த எண்ணிக்கையினர் | 4.4.1 | திறன் ரீதியாக தகவல் தொடர்பாடல் தொழினுட்பவியல் (த.தொ. தொ.) அறிவுடைய இளைஞர் மற்றும் வளர்ந்தோர் விகிதாசாரம் | • வெளிநாட்டு தொழில் வாய்ப்புக்களை இனங்காணுவதற்காக 96 விழிப்பூட்டும் நிகழ்ச்சித்திட்டங்கள் தொழில் தேடுவோருக்கு வசதியளிக்கும் முகமாக நடாத்தப்பட்டன.<br>• வெளிநாட்டு தொழில்கள் பொருட்டு 2,525 பயிற்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டதுடன் அதனூடாக 88,279 பேர்கள் பயிற்றுவி க்கப்பட்டனர். |
| 08 | நிலைபேறான, உள்ளடக்க,தொடர் பொருளாதார விருத்தியை,முழு மற்றும் பயனுறு வேலைவாய்ப்பினை மேம்படுத்தல் மற்றும் அனைவருக்கும் ஏற்புடைய தொழில் | 8.3 | பயனுறு செயற்பாடுகள், ஏற்புடைய தொழில் உருவாக்கம்,முயற்சியாண்மை, படைப்பாற்றல் மற்றும் புத்தாக்கம் என்பவற்றிக்கு ஒத்தழைக்கும் அபிவிலுத்தி-நோக்கிய கொள்கைகளை மேம்படுத்துதல் அத்துடன்<br>நிதி சேவைகளை அணுகல் ஊடாக அடங்கலாக நுண், சிறிய மற்றும் நடுத்தர அளவு தொழில்முயற்சிகள் உருவாவதையும் வளர்வதையும் ஊக்குவித்தல். | 8.3.1 | துறைசார் மற்றும் பாலியல் ரீதியாக விவசாயமல்லாத துறைசார் வேலைவாய்ப்பில் முறைசாரா வேலைவாய்ப்பின் விகிதாசாரம் | • இனங்காணப்பட்ட புலம்பெயர் வேலையாள் குடும்பங்கள் பொருட்டு 4,462 குடும்ப அபிவிருத்தி திட்டங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன.<br>• புலம்பெயர் வேலையாளர் குடும்பங்களின் பலவீனமான பிள்ளைகள் பொருட்டு 793 கவனிப்பு திட்டங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன.<br>• புலம்பெயர் வேலையாளர் குடும்பங்களை இலக்காகக்கொண்டு 4,438 விழிப்பூட்டும் நிகழ்ச்சித்திட்டங்களும் பிற ஆதரவு சேவைத்திட்டங்களும் அபிவிருத்தி அலுவலர்களினால் நடாத்தப்பட்டன.<br>• வெளிநாட்டு ராஜதந்திர தலையீட்டுடன் பல்வேறு கஷ்டங்களுக்கு உட்பட்டிருந்த 1,641 புலம்பெயர் வேலையாட்களை மீள கொண்டு வருவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.<br>• புலம்பெயர் வேலையாட்களுக்கான காப்புறுதி கட்டுப்பணங்கள் 338,500 பேர்கள் பொருட்டு கொடுப்பனவு மேற் கொள்ளப்பட்டிருந்தது. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | | • வெளிநாட்டு ராஜதந்திர தலையீட்டுடன் பல்வேறு கஷ்டங்களுக்கு உட்பட்டிருந்த 1,641 புலம்பெயர் வேலையாட்களை மீள கொண்டு வருவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.<br>• புலம்பெயர் வேலையாட்களுக்கான காப்புறுதி கட்டுப்பணங்கள் 338,500 பேர்கள் பொருட்டு கொடுப்பனவு மேற் கொள்ளப்பட்டிருந்தது. |
| | 8.5 | 2030 ஆம் ஆண்டளவில், இளைஞர் மற்றும் இயலாமையுடனான நபர்கள் அடங்கலாக சகல ஆண்கள், பெண்கள் பொருட்டு பயனுறு, ஏற்புடைய தொழில் வாய்ப்புக்களை வழங்கல் | 8.5.1 | தொழில், வயது மற்றும் இயலாத்தன்மை போன்ற காரணிகளுக்கிணங்க ஆண், பெண் வேலையாட்களின் சராசரி மணித்தியால உழைப்பு. | • தொழில் சட்ட நியதிகளின்படி, தனியார் மற்றும் பகுதியளவு அரச துறை ஊழியர்களின் சராசரி மணித்தியால உழைப்பு பாலியல், வயது, தொழில் மற்றும் இயலாமைரீதியாக வேறுபடு வதில்லை. |
| | | | 8.5.2 | பாலியல், வயது மற்றும் இயலாமையுடனான நபர்கள் தொடர்பில் வேலையில்லா விகிதாசாரம் | |
| | 8.7 | சிறுவர்களை இராணுவத்தில் சேர்த்தல் உள்ளிட்ட பலவந்தமான தொழிலை இல்லாதொழித்தல், பெண் அடிமைத்தனத்துக்கு முடிவுகட்டுதல், ஆட்கடத்தல், சிறுவர் தொழிலின் பாதகமான வடிவங்களை தடைசெய்தல் பொருட்டு பயனுறு நடவடிக்கைகளை உடனடியாக எடுத்தல் அத்துடன், 2025 ஆம் ஆண்டளவில் சிறுவர் தொழிலின் அனைத்து வடிவங்களையும் இல்லாதுசெய்தல் | 8.7.1 | 5-17 வயதுப் பிரிவில் பாலினரீதியில் வேலையாட்களாக ஈடுபடுத்தப்பட்ட பிள்ளைகளின் எண்ணிக்கை | • சிறுவர் தொழிலை இல்லாதொழிக்கும் நாடாக இலங்கையை மாற்றும் நிலை பேறான அபிவிருத்தி இலக்குடன், கம்பஹா, களுத்துறை, பதுளை மற்றும் காலி மாவட்டங்களை சிறுவர் தொழிலற்ற வலயங்களாக பிரகடனப்படுத்துதல் தொடர்பில் குழுவொன்றை நியமிப்பதற்கும், செயல் திட்டங்களை தயாரிப்பதற்கும், செயலமர்வுகளை நடாத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.<br>• சிறுவர் தொழில் சம்பந்தமாக கிடைத்த 160 முறைப்பாடுகள் தொடர்பில் விசாரணைகள் நடாத்தப்பட்டன. அத்தகைய 11 முறைப்பாடுகளில் சிறுவர் தொழில் வெளிப்பட்டமையினால் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. |

| | | | | |
|---|---|---|---|---|
| 8.8 | தொழில் உரிமைகளை ஏற்றுக்கொள்ளுதல் மற்றும் புலம்பெயர் பெண்கள், புலம்பெயர்பவர்கள் மற்றும் ஆபத்தான தொழில்களில் ஈடுபடுவோர் அடங்கலாக எல்லா தொழிலாளர்கள் பொருட்டு சேமமான, பாதுகாப்பான வேலை சூழலை மேம்படுத்தல் | 8.8.1 | பாலின மற்றும் புலம் பெயர்தல் நிலைக்கிணங்க மரணத்தை ஏற்படுத்தும், ஏற்படுத்தாத விபத்துக்களின் விகிதாசாரம் | • 2022 ஆண்டு காலப்பகுதியில், வேலைத் தலங்களில் 66 மரணம் ஏற்படுத்தும் விபத்துக்களும் 1260 மரணம் ஏற்படுத்தா விபத்துக்களும் இத்திணைக்களத்திற்கு அறிக்கையிடப்பட்டுள்ளன. திணைக்களம் இவ்விபத்துக்கள் பற்றி விசாரணை செய்துள்ளதுடன், சட்ட உருக்கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அத்துடன், விபத்துக்கான காரணங்களை அறிந்து அத்தகைய விபத்துக்கள் திரும்ப ஏற்படுவதை தடுப்பதற்கு தொழில் வழங்குநர்கள் மத்தியில் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது. இதற்கிணங்க மீளாய்வாண்டில், தொழிற்சாலை கட்டளைச்சட்டத்தின் ஏற்பாடுகளை மீறிச் செயற்பட்ட 263 தொழில் வழங்குநர்களுக்கு எதிராக திணைக்களம் சட்ட நடவடிக்கை ஆரம்பிள்ளது. |
| | | 8.8.2 | பாலின மற்றும் புலம்பெயர்தல் மட்டத்தின்படி சர்தேச தொழில் தாபனம் மற்றும் தேசிய அரசியலமைப்பின் அடிப்படையில் தொழில் உரிமைகளை (ஒன்றுகூடும் மற்றும் கூட்டுபேரம்பேசல் சுதந்திரங்கள்) சார்ந்து தேசிய இணக்க மட்டம் | • தொழிலாளர் உரிமைகளை பாதுகாக்கும் முகமாக ஒன்றுகூடும் சுதந்திரத்தையும் கூட்டுபேரம்பேசல் சுதந்திரத்தையும் வளர்ப்பதற்காக தொழிற்சங்கங்களை உருவாக்கி பேணுவதற்கான வாய்ப்பு தொழிலாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. இதற்கிணங்க, 2022 ஆம் ஆண்டில் 143 தொழிற்சங்கங்கள் பதிவுசெய்யபட்டன. இவ்வாண்டு அந்த பதிவுசெய்யப்பட்டவை அடங்கலாக 2022.12.31 இல் நாட்டில் செல்லுபடியான தொழிற்சங்கங்களின் மொத்த எண்ணிக்கை 2053 ஆகும். |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 10 | நாடுகளுக்குள்ளேயும் நாடுகளுக்கு இடையிலும் சமத்துவமின்மையைக் குறைத்தல் | 10.7 | திட்டமிட்ட, நன்கு முகாமை செய்த புலம்பெயர்தல் கொள்கைகளை செயற்படுத்தல் ஊடாக ஒழுங்கான, பாதுகாப்பான, பொறுப்புடைய புலம்பெயர்தல் மற்றும் மக்கள் ஒன்றுதிரளுக்கு வசதியளித்தல். | 10.7.1 | முடிவிட நாட்டில் உழைத்த மாதாந்த வருமானத்தின் விகிதாசாரமாக ஊழியரினால் மேற் கொள்ளப்பட்ட ஆட்சேர்ப்புக் கிரயம் | • தொழில் புலம்பெயர் பற்றிய இலங்கை தேசிய கொள்கை-2008 கொள்கையின் நோக்கெல்லையை விரிவுபடுத்தல் மற்றும் இற்றைவரைப்படுத்தலுக்கு ஏற்ப மேலும் திருத்தப்பட்ட கொள்கை அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.<br>• இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகச் சட்டத்தின் திருத்திய சட்டமூலம் மீளாய்வு செய்யப்பட்டுக் கொண்டிருக்கிறது.<br>• சமூகப் பாதுகாப்பு முறைமையொன்றை உருவாக்குவதற்கு தேவைப்படும் சட்ட உருவரைச் சட்டகத்தை அமைக்கும் பொருட்டு வரைவு வடிவமைக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது.<br>• தாய்லாந்தில் நடைபெற்ற கொழும்பு செயன்முறை பிராந்திய கூட்டத்தில் பங்குபற்றியமை, அபுதாபி உரையாடலின் சிரேஷ்ட பிரதிநிதிகள் கூட்டத்தில் சூம் தொழில்நுட்பம் ஊடாக பங்குபற்றியமை அத்துடன் ஜீசீஎம் தொழில்நுட்ப குழுக்களை நடாத்துதல்.<br>• புலம்பெயர்தல் பற்றிய மதிப்பீடு ஒன்றினை மேற்கொள்ளுதல் அத்துடன் புலம்பெயர்தல் மற்றும் அபிவிருத்தி பற்றிய இறுதி அறிக்கையை விருத்தி செய்தலும் தொகுத்தலும்.<br>• உலகளாவிய பாதுகாப்பான, ஒழுங்கான தொழில் புலம்பெயர்தல் பொருட்டான இரண்டாவது வரைவுத்திட்டம் அக்கறை தாரர்களுடன் பகிரப்பட்டுள்ளது. |

## 5.2 நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை நிறைவேற்றுவதிலுள்ள சாதனைகளும் சவால்களும்

